

திருப்பூர் ராஜாராவ் வீதியில் அமைந்துள்ள மத்திய மாவட்ட கழக அலுவலகம், முரசொலி மாறன் வளாகத்தில் மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் திருப்பூர் தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி. மு.நாகராசன், மாவட்ட துணைச் செயலாளர்கள் வழக்கறிஞர்கள் எஸ்.குமார், கே.நந்தினி, மாநகர துணைச் செயலாளர், மாமன்ற உறுப்பினர் பி.ஆர்.செந்தில்குமார், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ப.கலைச்செல்வி, மாவட்டத் தொண்டரணி அமைப்பாளர் ஆனந்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.


துறைமுகம் எஸ்.கணேசன் இல்ல விழா!

சென்னை, அக்.29 –

துறைமுகம் மேற்கு பகுதி வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் கொத்தவால்சாவடி எஸ்.கணேசன் (எ) ஜோசப் இல்லத் திருமண வரவேற்பு விழாவில் மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

இவ்விழாவில் மேயர் பிரியா ராஜன், கழக செய்தி தொடர்பு குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம் கவி, தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா, சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன், அண்ணா அறிவாலயம் மேலாளர் பத்மநாபன், பகுதிச் செயலாளர் எஸ்.இராஜசேகர் மற்றும் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; திருமழிசை மின் மயானத்தில் கரண்ட் இல்லாம ரெண்டு மணி நேரமா அப்பாவோட பிணத்தை எரிக்க முடியாம கடைசியிலே சொந்த செலவுலே ஜெனரேட்டர் வாங்கி வந்து எரிக்க ஏற்பாடு பண்ணி இருக்காரு அவருடைய மகன். ஆனால் மின்சார வாரியம் தான் ஜெனரேட்டர் ஏற்பாடு செய்ததா சொல்லி மந்திரி புளுகி இருக்காரே?

போண்டி : **ஆமாய்யா; 'கரப்ஷன்' குமார் த.வெ.க. வின் 'கோயபல்ஸ்ஸா' எப்ப மாறினாருன்னு தெரியலை. ஆனா இதைப்பத்தி எல்லாம் ஒண்ணுமே தெரியாதவர் மாதிரி இருக்காரே நீலாங்கரை வீட்டுக்குள்ளே ஒருத்தரு! ஓட்டு போட்டவங்கதான் பாவம்யா!**

பெண்களின் பாதுகாப்பு முதல் மின்பற்றாக்குறை வரை - மக்கள் பிரச்சினைகளில் த.வெ.க. அரசின் மெத்தனப் போக்கு!

புதுக்கோட்டை வடக்கு - தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர்கள் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் கூட்டறிக்கை!

புதுக்கோட்டை, அக். 29 –

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் விடுத்துள்ள கூட்டறிக்கை வருமாறு:

தமிழகத்தில் பெண்களின் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு நிலை. போதைப்பொருள் புழக்கம், அத்தியாவசியப் பொருட்களின் விலை வாசி உயர்வு. மின்கட்டண உயர்வு மின்பற்றாக்குறை உள்ளிட்ட மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளைக் கண்டித்து, தி.மு.க. தலைமைக் கழக அறி விப்பின்படி, வரும் அக்டோபர் 31ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாபெரும் கண் டன ஆர்ப் பாட்டம் நடைபெறுகிறது.

புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார் பில், அக்டோபர் 31 ஆம் தேதி சனிக்கிழமை காலை 10 மணியள வில் புதுக்கோட்டை திலகர் திடலில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.





இந்த ஆர்ப்பாட்டத்தில் மகளிர் அணி நிர்வாகிகள், மகளிர் தொண்ட ரணியினர், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த மகளிர் மற்றும் கழகத் தோழர்கள் பெருந்திரளாகப் பங்கேற்க வேண்டும் என்று புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் ஆகியோர் கூட்டாகக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

த.வெ.க. அரசு ஆட்சிப் பொறுப் பேற்று ஆறு மாதங்கள் கூட முழுமை யாக நிறைவடையாத நிலையில், தமிழகத்தில் சட்டம்ஒ முங்கு பெண் களின் பாதுகாப்பு மற் றும் மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகள் குறித்து பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன. பெண் களும் சிறுமிகளும் அச்சமின்றி வாழ்வதற்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குவது எந்த வொரு அரசின் அடிப்படைக் கடமையாகும். ஆனால், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான குற்றங்கள், கொலைகள், தாக்குதல்கள் உள்ளிட்ட சம்பவங்கள் குறித்த செய்திகள் பொதுமக்களிடையே கவ லையை ஏற்படுத்துகின்றன. இத்தகைய குற்றங்களைத் தடுக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும், குற்றவாளிகள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கவும் அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல்,

பெண்களின் பாதுகாப்புக்காக உரு வாக்கப்பட்டதாகக் கூறப்படும் சிங்கப் பெண் சிறப்புப் படையின் செயல்பாடுகள் குறித்தும். பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் கேள்விகள் எழுப்பப் படு கின்றன. குற்றங்களைத் தடுப்பதில் காவல்துறையின் செயல்பாடுகள் வலுப்படுத்தப்பட வேண்டிய நிலையில், அரசின் செயல்பாடுகளை விமர்சிக்கும் தி.மு.க. தோழர்கள் மற்றும் ஜனநாயக சக்திகள் மீது நள்ளிரவு நேரத்தில் கைது நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதாகக் கூறப்படும் புகார்களும் ஜனநாயக உரிமைகள் குறித்த விவாதத்தை எழுப்புகின்றன.

பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும், குற்றங்களைத் தடுப்பதிலும், சட்டம்ஒழுங்கைப் பேணுவதிலும் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதே கழகத் தின் வலியுறுத்தலாகும்.

போதைப்பொருள் புழக்கம் இளைஞர்களின் எதிர்காலத்தையும் குடும்பங்களின் நிம்மதியையும் பாதிக்கக்கூடிய தீவிரமான சமூகப் பிரச்சினையாகும். பள்ளி. கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்களைப் போதைப்பொருள் பாதிப்பிலிருந்து பாதுகாப்பதுடன், போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனை யைத் தடுக்கவும் அரசு தீவிர நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும்,

போதைப்பொருள் விற்பனை வலையமைப்புகளைக் கண்ட றிந்து சட்டத்தின் முன் நிறுத்துவ தோடு. இளைஞர்களிடையே விழிப்பு ணர்வை ஏற்படுத்தும் நடவ டிக்கை க ளையும் தீவிரப்படுத்த வேண்டும். போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக அரசு அளிக்கும் வாக்குறுதிகள் நடைமுறையில் எந்த அளவுக்குச் செயல்படுத்தப்படுகின்றன என்பதையும் வெளிப்படையாக எடுத்துரைக்க வேண்டியது அவசியமாகும்.

த.வெ.க. அரசின் கடந்த ஐந்து மாத கால நிர்வாகத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு தொடர்பாகப் பொதுமக்களிடையே கவலைகள் எழுந்துள்ளன. அரிசி, பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் உள்ளிட்ட பொருட்களின் விலை உயர்வு நியாயவிலைக் கடைகளில் பொருட்கள் கிடைப்பதில் ஏற்படும் தட டுப்பாடு, காய்கறிகள் மற்றும் அன்றாடத் தேவைக்கான பொருட்களின் விலையேற்றம் ஆகியவை ஏழை, எளிய மற்றும் நடுத்தரக் குடும்பங்களின் பொருளாதாரச் சுமையை அதிகரிக்கின்றன.

இவற்றுக்குத் தீர்வு காண வேண்டிய அரசின பொறுப்பை வலியுறுத்தும் வகையில் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மகளிர் அணி, மகளிர் தொண்டரணி மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட தலைவர்கள், துணை தலைவர்கள், கழகத்தின் அனைத்து அணிகளையும் சேர்ந்த மகளிர் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் சட்ட மன்ற, நாடா ளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப் பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலை வர்கள், கழகத் தோழர்கள் அனை வரும் அக்டோபர் 31ஆம் தேதி சனிக்கிழமை காலை 10 மணியள வில் புதுக்கோட்டை திலகர் திடலில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத் தில் பெருந்திரளாகக் கலந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.



திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்திற்கு உட்பட்ட மாதாந்திர மாமன்ற கூட்டம் 41வது வார்டு, முருகம்பாளையம், 4ம் மண்டல அலுவலகத்தில் மண்டலக் குழுத் தலைவர், திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநகராட்சி துணை மேயர் எம்.கே.எம்.பாலசுப்பிரமணியம், மாநகராட்சி உதவி ஆணையாளர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அரசு துறை சார்ந்த அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

கோவையில் மக்கள் நடமாடும் பகுதியில்

கொட்டப்படும் குப்பைகளால் சுகாதார சீர்கேடு!

கழக தீர்மானக் குழு செயலாளர் நா.கார்த்திக் கண்டனம்!

கோவை, அக். 29 -

கோவை மாநகராட்சி ஜி.வி. ரெசிடென்சி பகுதியில் 52 மற்றும் 53வது வார்டுகளை இணைக்கும் பகுதியில், சங்கனூர் ஓடையின் கிளை ஓடை செல்லும் இடத்தில் குப்பைகள் கொட்டப்பட்டு வருவது அப்பகுதியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக கழக தீர்மான குழு செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் அப்பகுதியில் ஆய்வு மேற்கொண்டார்.

அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது : சங்கனூர் ஓடையை தூர் வாருவது நல்ல விஷயம் தான்.

ஆனால், தூர்வாரும் போது எடுக்கப்படும் குப்பைகள் மற்றும் துர்நாற்றம் வீசும் கழிவு மண்ணை, மக்கள் அதிகம் நடமாடும் ஜி.வி. ரெசிடென்சி பகுதியில் கொண்டு வந்து கொட்டியுள்ளனர்.

இதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன், சுகாதார கேடும் ஏற்பட்டுள்ளது.

மலைபோல் குவித்து வைக்கப்பட்டு இருக்கும் குப்பைகளை அகற்ற மாநகராட்சி ஆணையாளர் மற்றும் அதிகாரிகளிடம் தொலைபேசி மூலமாகவும், நேரில் சந்தித்தும் பல முறை கோரிக்கை விடுத்தும் இது வரை எந்த வொரு உரிய

நடவடிக்கையும் எடுக்ககப் படவில்லை. இதில், மாநகராட்சி நிர்வாகம் உடனடியாக தலையிட்டு மக்கள் வசிக்கும் பகுதியில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும். உரிய சுகாதார பணிகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

தி.மு.க. அரசைக் கண்டித்து

கோவையில் சார் பதிவாளர் அலுவலகங்கள் முன்பு பத்திர எழுத்தர்கள் ஆர்ப்பாட்டம்!

கோவை, அக். 29 –

தமிழக பத்திர பதிவுத்துறையில் 578 சார் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. இதில் 5 லட்சம் பத்திர எழுத்தர்கள் பணிபுரிந்து வருகிறார் கள். கடந்த 1865ம் ஆண்டு முதல் பத்திரப்பதிவு துறையில் எழுத்தர்கள் மூலம் பத்திரப்பதிவு எழுத்துப் பணிகள் நடைபெற்றன. தற்போதைய தவெக அரசு இதை தனியார் துறைக்கு மாற்றி வருகிறது. இடைண்டர் மூலம் தனியாருக்கு அழைப்பு அனுப்பப்படுகிறது. ஆன்லைன் மூலம் நடைபெறும் முறையில் ஆள் மாறாட்டம், போலி பத்திரம் பதிவு போன்ற பல தவறுகள் நடக்க வாய்ப்பு உள்ளன. மேலும் இதில் வாங்குபவர் மற்றும் கொடுப்பவர் பெயர்கள் மட்டுமே இடம் பெறுகின்றன. இதனால் முழு விவரமும் அதில் குறிப்பிடப் படுவதில்லை இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படும் நிலை உள்ளது. மேலும், இதை தனியாருக்கு மாற்றுவதால் 5 லட்சம் பத்திர எழுத்தர்கள் குடும்பங்கள் பாதிக்கும் அபாயம் உள்ளது. எனவே இதில் பழைய நடைமுறையே தொடர தமிழக முதல்வர் விஜய், பத்திர பதிவுத்துறை அமைச்சர் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோவை ரெட் மீல்ட் அருகே உள்ள பீளமேடு சார் பதிவாளர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு பத்திர எழுத்தர்கள் சங்கம் சார்பில் பீளமேடு கிளை தலைவர் பார்த்திபகுமார் தலைமையில் செயலாளர் இளங்கோவன், பொருளாளர் சிவராம கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் கோஷம் எழுப்பினர். அப்போது பெண் ஊழியர்கள் தரையில் அமர்ந்து கோஷம் எழுப்பினர். பத்திர எழுத்தர்கள் கருப்பு பேட்ஜ் அணிந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் நிர்வாகிகள் பழனிச்சாமி, விஜய சந்திரன், சரஸ்வதி, பாக்கியலட்சுமி, செல்வராஜா, ராமதாஸ், சீனிவாசன், விஜய பாஸ்கர், அர்ஜுன், அரவிந்த், பிரேம், முத்துக்குமார், சண்முகம், வித்யா, அகிலா உள்ளிட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

சூலூர் சார்பதிவாளர் அலுவலகங்களில் 25க்கும் மேற்பட்ட அரசு பதிவு பெற்ற பத்திர எழுத்தர்கள் உள்ளனர். இவர்களை சார்ந்தோர் சுமார் 175 பேர் பணி புரிகின்றனர். தமிழக அரசு கொண்டுவரக்கூடிய ஆன்லைன் பத்திரப்பதிவு முறையால் பத்திரப்பதிவை நம்பி உள்ள தொழிலாளர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என தமிழ்நாடு பத்திர நகல் எழுதுவோர் சங்கத்தினர் சூலூர் சார்பதிவாளர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பத்திர நகல் எழுதுவோர் சங்கத்தினர் கலந்து கொண்டு கண்டனம் தெரிவித்தனர்.

அன்னூர்: கோவை மாவட்டம் அன்னூரில் அமைந்துள்ள சார்பதிவாளர் அலுவலகம் முன்பு பத்திரப்பதிவு துறை சார்பில் மாதிரி பத்திரப்பதிவு மையம் துவங்க இடெண்டர் முறை மூலம் தனியார் மயமாக்க எதிர்ப்பு தெரிவித்து தமிழ்நாடு பத்திரம் நகல் எழுதுவோர் சங்கம் சார்பில் கருப்பு பேட்ஜ் அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோவை பெரியநாயக்கன் பாளையத்தில் சார்பதிவாளர் அலுவலகம் முன்பு பத்திரப்பதிவு துறை சார்பில் மாதிரி பத்திரப்பதிவு மையம் தொடங்க இடெண்டர் முறை மூலம் தனியார் மயமாக்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்நாடு பத்திரம் நகல் எழுதுவோர் சங்கம் சார்பில் பெரியநாயக்கன்பாளையம் கிளை தலைவர் மோகன் பிரசாத் தலைமையில் கருப்பு பேட்ச் அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழக அரசின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் பெண்கள் உட்பட 50க்கும் மேற்பட்டவர்கள் கருப்பு பேட்ச் அணிந்து சுமார் 10 நிமிடங்கள் அமைதி போராட்டம் நடத்தினர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

திருச்சி ஏ.வி. கிருஷ்ணமூர்த்தி

அக்டோபர் 29 (1995)



திருச்சி நகரக் கழகச் செயலாளராகவும் – நகர கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் பணியாற்றியவர்.

திருச்சி வெங்காயமண்டி பாரம் சுமக்கும் தொ.மு.ச. தலைவராகவும் – அண்ணா சிந்தனையாளர் பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

ஆங்கிலத்தில் சிறப்பாகச் சொற்பொழிவாற்றக்கூடியவர்.

கொள்கை உறுதியும் – அடக்குமுறைகளைத் தாங்கும் நெஞ்சுரமும் கொண்டு திருச்சியில் கழகத்தை வளர்த்த இனிய உடன்பிறப்பு என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

க. சுப்பு

அக்டோபர் 29 (2011)



கழகத்தில் சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்தவர்.

மிசா சட்டத்தின்கீழ் ஓராண்டு கைதியாக சென்னை சிறையில் இருந்தார்.

சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் உறுப்பினராக திகழ்ந்து திறம்பட பேசி வாதிட்டவர்.

கழகத்தில் தொழிலாளர் அணிச் செயலாளராகவும், பல்வேறு தொழிற்சங்கங்களில் தலைவராகவும் பணியாற்றினார்.

"பகைவரையும், வசீகரிக்கக்கூடிய பேச்சாற்றலும், வாதத்திறமையும் பெற்றவர் சுப்பு" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் தெரிவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

தலைமைக் கழகம்

தி.மு.க.